சபைக்குத் தேவை சமநிலை

இன்றைய சபையின் நிலைமைதனை ஒரு கணம் உற்று பார்க்க உங்களை அழைக்கின்றேன். மனம் திறந்து தெளிவான கண்ணோட்டத்தோடு சில காரியங்களை பகிர்ந்துகொள்ள வாஞ்சிக்கிறேன். இதனால் பலரால் தவறாக நான் நினைக்கப்படுவதற்கு வாய்ப்புண்டு. ஆயினும் குற்றப்படுத்தும் நோக்கத்தோடு அல்ல திறந்த மனப்பான்மையோடு இதை எழுதுகிறேன். காரணம் சபையின் நீட்டப்பட்ட கரமாகத்தான் மிஷனரி ஊழியம் இயங்க வேண்டும் (extended hand of the Chruch) என்பது என்னுடைய மாற்ற முடியாத கருத்து. எனவே திடமான சபைதான் இந்த தேசத்தை இயேசுவுக்கு சொந்தமாக்க முன்னோறி செல்லும் மிஷனரிகளின் பின்னணியாக அமைகிறது.

பொதுவான சீர்த்திருத்த சபைகளை இரண்டு பிரிவாக பிரிக்கின்றனர் மக்கள். அநேக பிரிவுகளும் சித்தாந்தங்களும், முறைகளும் இன்று காணப்பட்டாலும், இந்த இரண்டு பிரிவுகளை மேலோட்டமாக காண முடியும் "பாரம்பரிய சபைகள்" (Traditional & Denominational Churches) சுவிசேஷ ஆவிக்குரிய சபைகள் (Evangelical and Pentecostal ie.. Charismatic Churches) இந்த மேலோட்டமான பிரிவினையை சிலர் அங்கீகரிக்க மறுப்பினும் இதில் உண்மை உண்டு. அவைகளின் பல ஒற்றுமைகள் இருப்பதே இதற்கு காரணம்.

பாரம்பரிய சபைகளில் அதிகாரம் வகிக்க விரும்புவோர் ஏராளம். எனவேதான் தேர்தல் என்ற முறை பின்பற்றப்பட்டு அதில் ஏற்படும் சேதம் தேவனுக்கும் சபைக்கும் ஏராளம். ஆனால் பொதுவாக ஆவிக்குரிய சபைகளில் அதிகாரம் மேய்ப்பர் கையில் அதிகம் உள்ளது. அப்படியே ஒரு சிலருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டாலும் அது நியமனத்தை பொறுத்தே அமைகிறது. (Nominated Member) இந்த இரண்டிலுமே சாதக பாதக நிலைகள் உள்ளன. ஆதிச்சபையில் பிரச்சனை எழும்பிய போது அதை தீர்த்து வைக்க அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்கு தெரிந்தெடுக்க சுதந்திரம் தந்தனர். அதனை அப்போஸ்தவர்கள் ஆமோதித்த பின் அவர்கள் நியமிக்கப்பட்டனர். (அப் 6:1-6) ஆனால் அந்த அப்போஸ்தலர் தெரிந்து எடுக்கப்பட வேண்டியவர்களின் குணாதிசயங்களை தெளிவாக கூறினர் (வச 3) இவர்கள் உதவிக்காரர்கள் (Deacons) என்று அழைக்கப்பட்டனர். அன்றாட அலுவல்களை கவனிக்க, நிர்வகிக்க இவர்கள் அமர்த்தப்பட்டனர் பின்னர் பவுலின் ஊழியத்திற்கு பின்னர் பட்டணங்கள் தோறும் அந்தந்த சபைகளின் மூப்பர்களை ஏற்படுத்தினார் என்றும் (அப் 14:23) தீமோத்தேயுவையும் தீத்துவையும் இதற்காகவே அனுப்பித் தந்தார் என்றும் படிக்கிறோம்.

பாரம்பரிய சபைகள் இப் 6ஐயும் ஆவிக்குரிய சபைகள் அப்.14:23ம் பின்பற்றுகிள்றன. ஆயினும் இரண்டிலும் இன்றைக்கு குறைவுகளை காணமுடியும். குணதிசயங்கள் அதிகமாக சோதிக்கப்படாமல் வேண்டியவர் வேண்டாதவர் என்று காரியம் மேலோங்குவதினால்தான் இந்த குறைபாடு. இதனால் ஏற்படும் மோதல்கள், இருதய காயங்கள், வெறுப்பு கசப்புகள் சபையின் தூய்மையை கெடுத்து அதனை முன்னேறவிடாமல் தடுத்து நிறுத்திவிடுகின்றன. அநேக நேரங்களில் இதனை சாத்தான் தனக்கு ஆயுதமாக எடுத்துக் கொண்டதும் உண்டு. எந்த முறைதனை பின்பற்றுகிறோம் என்பதனைக் காட்டிலும் யார் இதனை பெறுகிறார்கள் என்பதில் கவனம் செலுத்தினால் அன்றைக்கு வேத வசனம் விருத்தியடைந்து, சீஷருடைய தொகை மிகவும் பெருகிற்று. (அப். 6:7) என்ற காரியம் இன்னும் நடக்கும்.

இரண்டாவதாக, பாரம்பரிய சபைகளில் சடங்காச்சாரங்கள் அதிகம். அவைகள் தலைமுறையாக பின்பற்றப்படுவதுமாத்திரம் அல்ல அதனை குறித்த பிடிவாத

உணர்ச்சிகளுக்கு குறைவில்லை. ஜெப புஸ்தகத்தில் உள்ள இரு ஜெபத்தை (மரியானின் கீதம்) பண்டிகை ஒன்றில் விசேஷ செய்தியாளர் வந்திருந்தபடியால் அவருக்கு அதிக நேரம் தர எண்ணி, வாசிக்காமல் விட்டதினால் அந்த போதகர் அந்த சபையின் மக்களிடம் பட்டபாடு கொஞ்சமல்ல. ஆவிக்குரிய சபைகளிலும் சில பாரம்பரியங்கள் உண்டு. ஆனால் அவைகள் அத்தனை பிடிவாதமாக பின்பற்றப்படுவதில்லை. ஆனால் ஆவிக்குரிய சபைகளில் திட்டமிட்ட ஆராதனை என்று அநேக நேரங்களில் இல்லாதபடியால் நடத்துபவரின் மனநிலைமை (mood) பொறுத்து ஆராதனை அமைந்துவிடும் ஆபத்து உண்டு. சில ஆராதனைகளில் நடத்துபவருக்கு mood வரும் வரை பாடல்கள் நடத்தப்படும். அது மற்றவர்களை தொய்ந்து போகப்பண்ணும். பாரம்பரிய சபைகளில் கிளிப்பிள்ளை போல் மாறிவிடுகிறார்கள்.

அமைதியான தொழுது கொள்ள விரும்புகிறவர்கள் உண்டு. ஆர்பாட்டமாக தொழுது கொள்ள விரும்புகிறவர்களும் உண்டு. முன்னவர்களை கல்லறைத்தோட்டம் என்றும் பின்னவர்களை இரைச்சல் கும்பல் என்றும் ஒருவருக்கொருவர் வசைமாறி பொழிவதும் இயற்கையே…. அமைதியின் நேரமும் வேண்டும் ஆர்ப்பாட்டம் அல்லது கொண்டாட்ட நேரமும் வேண்டும். ஆதிசபையில் இதனை நாம் தெளிவாகக் காணலாம் இயேசுவின் காலத்தில் ஆர்ப்பரித்த மக்களை பரிசேயர் அடக்கச் சொன்னார்கள். இயேசுவோ, இவர்கள் கூப்பிடவில்லையென்றால் கல்லுகள் கூப்பிடும் என்றார் (லுக் - 19:38-40) ஜெபத்தைக் குறித்து பேசின இயேசு அந்தரங்கத்திலிருக்கிற பிதாவை நோக்கி… என்று கூறுகிறார். (மத். 6:5-8) இரண்டிற்கும் இடம் உண்டாக்கிய ஒரு சூழ்நிலை ஆராதனை. ஆவியானவரால் ஆளுகை செய்யப்படும் ஒரு ஆராதனை அநேகருடைய காயங்களை மாற்றி ஆராதனைக்கு புதுப்பொலிவையும் அர்த்தத்தையும் உண்டாக்கிவிட வாய்ப்புண்டு. அது, அநேகரை கவர்ந்திழுக்கும் வசீகர சக்தி கொண்டது.

மூன்றாவதாக சபை கூடிவருதல் பாரம்பரிய சபைகளில் வழக்கமான ஒன்றாக (Habitual) மாறிவிட்டது. ஆவிக்குரிய சபைகளோ, தங்களை ஆற்றித் தேற்றும் இடமாகவும் உற்சாகமூட்டும் இடமாகவும் மாத்திரம் அமைந்துவிட்டது (entertaining) இவைகள் தேவைதான். இயேசு வழக்கத்தின் படியே ஜெப ஆலயம் சென்றார் என்பது உண்மைதான். ஆயினும் சபைக்கூடுகை செயல்படத்தூண்டும் வகையில் அமைவதே மிகவும் முக்கியம் (motivating) எபி 10:24,25 இதைத்தான் வலியுறுத்துகிறது. எனவே கவனம் செலுத்துவது நல்லது. அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் அவர்களை தட்டிவிட்டுக் கொண்டே இருக்கும் இடமாக சபை மாற மாற செயல்படாதவர்களும் அதில் இணைத்து செயல்பட செயல்பட அது தன் எல்லைகளை எளிதாக தாண்டிச்செல்ல ஏதுவாகும். அது மக்களை இயேசுவுக்காய் எதையாவது செய்தோம் என்ற நிலைக்கு மாற்றிவிடும். இது இன்றைய அத்தியாவசிய தேவை.

நான்காவதாக பாரம்பரிய சபைகளில் மேய்ப்பர் ஒரு காவலாளாக மாத்திரமே செயல்படுகிறார். இருப்பவற்றை காத்துக்கொண்டால் போதும் என்ற நிலை (as a care taker) ஆனால் ஆவிக்குரிய சபையின் போதகர் அதைத்தாண்டி செயல்படுகிறார். இதற்கு காரணம் அநேக சபையின் போதகர்கள் அவர்களே ஆரம்பித்த ஊழியம் அல்லது சபை அது. அதில் விசேஷ கவனம் செலுத்திகிறார். ஆனால் பாரம்பரிய சபைகளில் அவர்களின் இடமாற்றம் (Transfer) அவர்களை இந்த சொந்தம் பாராட்டும் நிலையிலிருந்து வேறுபடுத்துகிறது. ஒரே போதகரின் கீழ் பல சுபாவங்களால் இடற வாய்ப்புண்டு. மாற்றம் இதனை தவிர்க்கும். சில பெலவீனங்கள் சபை வளர்ச்சியை குன்றிப் போகப் பண்ணலாம். இதற்கு மாற்றம் மாற்றுமருந்தாகலாம். ஆனால் மாறுதல் நிரந்தரமாக செயல்படுத்தப்படும்போது அவர்கள் இது ‘ என் ஆடுகள்’ என்கிற நிலையிலிருந்து வேறுபடும் ஆபத்து உள்ளது. இரண்டையும் இணைந்து செயல்படுகிற சபைகளே உரம் கொண்டவைகளாக மாறுகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஒரே ஆள் (one man show) எப்போதும் என்பது என்றைக்கும் எல்லா நிலையிலும் ஏற்றதாக இருப்பதில்லை.

ஐந்தாவதாக பாரம்பரிய சபைகளில் விழாக்களும் கட்டிடங்களை அழகுபடுத்தலும் போன்ற சபையாரின் கவனத்தை ஈர்க்க உபயோகப்படுத்தப்படும் முறைகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் ஆவக்குரிய சபைகளில் வெளி நோக்க திட்டங்கள் அதிகம் செயல்படுத்தப்படுகின்றன. இங்கிலாந்து சபை சக்தியற்று அழியும்தருவாயில் உள்ளது. சபையைத்தான் இயேசு வற்புறுத்துகிறார். அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவான் 10:9) அதுவே பரிபூரண ஜீவனுக்கு வழி நடத்தும். (inward look & outward look.) அநேக கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டாலும் சபையில் இந்த இரண்டு நோக்கத்தையும் செயல்ப்பட்டாலும் சபையில் இந்த இரண்டு நோக்கத்தையும் செயல்படுத்தும் கூட்டங்களும் சீராக அமுல் படுத்தப்பட்டால்தான் சாதகமான சபை வளரும் என்பது தெளிவு. கூடவே ஆவிக்குரிய பிணைப்புகளுக்கு (Spiritual Fellowship) அடிகோலும் காரியங்கள் செய்யப்படுவது இதனை சார்ந்ததாகவே இருக்குமானால் மிகவும் நல்லது.

எந்த சபையின் உறுப்பினர்களுக்கு ஆவிக்குரிய உணர்வும், தேசத்தின் தேவையை குறித்த தீர்க்கமான சிந்தனையும், செயல்பாடும் வளரும், மிஷனரி ஊழியத்திலும் சிரத்தை எடுக்கும், ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதிலும் உற்சாகம் காட்டும். இந்த சிந்தனைகளால் இன்றைய சபை தினம் நிரம்ப ஜெபிப்போம். கர்த்தர் தம்முடைய சபைகளை தெளிவான பாதையில் நடத்தவாராக

May 2000

ஆறாவதாக பாரம்பரிய சபைகளிலே கிருபை வரங்களுக்குஅதிக முக்கியத்துவமும் ஆவிக்குரிய சபைகளில் ஆவியின் வரங்களுக்கு அதிக முக்கியத்துவமும் தரப்படுவதை நாம் காணலாம். ஆவியின் வரங்கள் ஒன்பது. அது அனைவருக்கும் தரப்பட்டுள்ளது. ஏனெனில் ஆவியானவர் நம்மள் கிரியை செய்து தேவைக்குத் தகுந்தாற்போல், இடத்தில் ஏற்றாற்போல் அதனை உபயோகப்படுத்த உற்சாகமூட்டுகிறார். எனவே அனைவரிலும் அவர் கிருயை செய்ய, அநேகர் வரங்களை நாடவும் செயல்படுத்தவும் தொடங்குகின்றனர். இதனால் ஆராதனையில் அநேகர் பங்கு கொள்ளும் () வாய்ப்பு பெருகுகிறது. (1கொரி.12:4-11) ஆனால் பாரம்பரிய சபைகளிலோ கிருபையின் வரங்கள் என்று வர்ணிக்கப்படும் வரங்களைச் சார்ந்தே ஊழியத்தில் நபர்கள் உபயோகிக்கப்படுகின்றனர். (ரோமர். 12:6-8) இதனால் பலர் செயலற்றவர்களாக இருக்கின்றனர். இன்னமும் சொல்லப்போனால் பார்வையாளர்களாகவே வந்து போகின்றனர். () பங்காளர்களாக செயல்பட வாய்ப்பில்லை.

கிருபையானது ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக தரப்பட்டுள்ளது. எனவே கிருபையின் வரங்களும் ஆவியின் வரங்களும் இணைந்து செயல்பட சபையில் வாய்ப்பளிப்போமானால் அனைத்து மக்களும் பங்கெடுக்கும் ஒரு நல் ஆராதனை அமைவதோடு அனைவரையும் தேவன் உபயோகப்படுத்தும் காட்சி அநேகரை கவர்ந்திழுக்க போதுமானதாக இருக்கும். அது அனைவருக்கும் ஒரு திருப்தியையும் உண்டாக்கி விடும் என்பது மறுப்பதற்கில்லை.

ஏழாவதாக பாரம்பரிய சபைகளில் பட்ஜெட் போடப்பட்டு அதற்காக வசூல் வேலைகள் நடைபெற்று காரியங்கள் செயலாற்றப்படும். இந்த பட்ஜெட்டில் வெளி ஊழியங்களுக்கும் மிஷனரி பணிகளுக்கும் ஒதுக்கப்படும் தொகை மிகமிகக் குறைவானதே. ஆனால் ஆவிக்குரிய சபைகளில் பட்ஜெட் ஒன்றும் போடப்படுவதில்லை. கேட்டால் எல்லாம் விசுவாசத்தில் செயல்படுவதாக பதில் அளிப்பர். இது அநேக நேரங்களில் கேட்பதற்கு நலமாக தோன்றினாலும் பெரிய இலக்குகள் அமைப்பதனையும், சீராக செலவழிக்கப்படுவதையும் சீரழித்துவிடும் என்பது தெளிவு."If you do not plan, you plan to destroy" என்பது நாம் அறிந்திருக்க வேண்டியதே. (திட்டமிடாதவர்கள் அழிவுக்கு திட்டமிடுகிறார்கள்) பட்ஜெட் விசுவாச கண்ணோட்டத்தில் தேவ சமூகத்தில் காத்திருப்பதினால் கிடைக்கும் வெளிச்சத்தோடு அமைக்கப்பட்டு செயலாக்கப்பட்டால் பல புதிய காரியங்களை சபையின் மூலம்

நடத்த வாய்ப்புண்டு. தன்னைச் சரி செய்து கொள்ளவும் சபையை குறித்த காரியங்களில் தேவ நோக்கம் நிறைவேறவும் பலன் தரும். இலக்கில்லாமல் நடக்கிறவன் வீணடிக்கிறான் என்பது உண்மை. இலக்கு விசுவாசக் கண்ணோட்டத்தில் அமைந்துவிட்டால் புது பொலிவு. உற்சாகம், சபையை பற்றிக் கொள்ளும். இது நம்மை நாமே சோதித்தறிவதற்கும் அதிகமாக உதவிச் செய்யும் என்பது எத்தனை நிச்சயம்.

எட்டாவதாக பண காரியங்களில் பாரம்பரிய சபைகளில் கணக்கு வைக்கும் முறைகள் தெளிவாக அமைந்திருக்கும். சபையின் வரவு செலவுகள் மக்கள் அனைவரும் அறியும்படி அடிக்கடி அவைகள் மக்கள் முன் வைக்கப்படும். ஆனால் அநேக ஆவிக்குரிய சபைகளில் மக்களுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்கிற நிலையில் அந்த கணக்கு பேணிக் காக்கப்படுவதில்லை. “கர்த்தருக்கு கொடுத்ததை கணக்கு கேட்காதே” என்பது பொதுவான வாதமாக அமையும். பாரம்பரிய சபைகளில் கணக்குகள் சீராக வைக்கப்பட்டாலும் செலவுகள் உள்நோக்கத்தோடே செய்யப்படுவதினால் காணிக்கை அளிப்பவர்க்கு அத்தனை உற்சாகமிருக்காது. ஆவிக்குரிய சபைகளிலோ கொடுத்தலின் ஆசிர்வாதம் அடிக்கடி பேசப்படுவதினால் கொடுக்க உற்சாக உள்ளம் ஜனங்களில் காணப்படும். ஆனால் அவர்கள் கொடுக்கும் தன்மையும் அளவும் அவ்வப்போது அறிவிக்கப்பட்டு அதன் செலவினங்களும் தெரிவிக்கப்பட்டால் இந்த உற்சாகம் இன்னமும் அதிகரிக்கும். சந்தேகத்தோடு காணிக்கை செலுத்தும் அநேகரில் கண்கள் திறக்கப்பட்டு தன்னுடைய காணிக்கை பயனுள்ளவைகளுக்கு செலவாகிறதே என்ற அறிவு கொடுத்தலின் தாராள தன்மைகளுக்கு உண்டாக்கும்.

எனவே இந்த இரண்டையும் கலந்த ஒரு அமைப்பு சபையில் செயல்பட்டால் இன்றைய இந்தியா சந்திக்கப்பட இந்தியரின் பணமே போதுமானதாக அமையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஒன்பதாவதாக பாரம்பரிய சபைகளில் வயதானவர்களின் ஆக்கிரமிப்பு வாலிபரை செயல்படுத்தாதபடி தடுத்தவிடும். அனுபவமில்லை, என்ற வார்த்தைகளில் அவர்கள் அடிக்கடி அடக்கப்படுவர். கூடவே வாலிபர்கள் செய்யும் அநேக காரியங்கள் சந்தேகக் கண்ணோட்டத்தில்தான் கவனிக்கப்படும். ஆவிக்குரிய சபைகளில் வாலிய துடிப்பு அநேக முறை உபயோகப்படுத்தப்படும். அதினால் சில குழப்பங்கள், காயங்கள் ஏற்படும் சூழ்நிலைகளும் அதிகம். சிறுவன் ஒருவன் நடத்தும் ஆராதனையில் பெரியவர்களையும் ஈனப்படுத்தும் வார்த்தைகள் சில நேரங்களில் உபயோகப்படுத்தப்படுவதினாலும், முதியவர்களைக் காட்டிலும் ஆவியின் பெலன் தங்களுக்கு அதிகம் என்று எண்ணிவிட வாய்ப்பு உண்டாவதினாலும், ’முதியவர்களுக்கு சொப்பனம், எங்களுக்கோ தரிசனம்’ என்ற நினைவுகள் பல நிலைகளில் சரிவைக் கொண்டுவர வாய்ப்புண்டு.

முதியவர்களும் தேவை, வாலிபவர்களும் தேவை, அனுபவமும் தேவை ஆர்ப்பரிப்பும் உற்சாகமும் தேவை. எனவே இதனை சமநிலைப்படுத்தி இருதிறத்தாரையும் உபயோகிக்க சபை கற்றுக் கொண்டால் இளைஞரின் ஐந்தப்பம் இரண்டு மீனும், முதியவரின் பந்தி விசாரிப்பும் இணையும்போது ஐந்தாயிரம் பேரின் பசி ஆற்றப்பட்டது போல் அநேகரின் பசி ஆற்றப்படும். இருவரும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளவும், புரிந்து கொள்ளவும் பகிர்ந்தளிக்கவும் கற்றுக் கொண்டால் “ பெற்றோரின் இருதயத்தை பிள்ளைகளிடத்துக்கும் பிள்ளைகளின் இருகயத்தை பெற்றோரிடத்திற்கும் திரும்பும் எலியாவின் ஆவி அசைவாட பெருங்காரியங்கள் நிகழும். “கர்த்தரே தெய்வம்” என்ற அறிக்கைகள் பெருகும்.

கடைசியாக பாரம்பரிய சபைகள் சமூக சேவைகளை பிரகானப்படுத்தும், ஆவிக்குரிய சபைகள் ஆவிக்குரிய தேவைகளை மாத்திரம் அழுத்திச் செல்லும். சமுதாயத்தின் தீமைகள், ஏற்றத்தாழ்வு, அநியாயம், அடிமையாக்குதல் போன்ற சமூகத் தேவைகளை சந்திக்கவும் சீர்ப்படுத்தவும் உப்பாகிய சபைக்கு பெரும் பொறுப்பு

உண்டு. ‘கூடவே சரீரத்தேவைமிகுந்தோர், நோயாளிகள் வயதானோர், தெருவில் வாழும் பிள்ளைகள், விபசாரத்தில் பாதிக்கப்பட்டோர் ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் அனைவரையும் கருத்தில் கொள்ள வேண்டும். திக்கற்றோர், விதவைகள், அனாதைகள் நம்முடைய வாழ்வில் இடைபடும்போது நாம் சும்மாயிருத்தல் எங்ஙனம். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்…. மாசில்லாத சுத்தமானபக்தி யென்று சொல்லும் வேதம், உலகத்தால் கறைபடாத வாழ்க்கையையும் வலியுத்தத் தவறவில்லை (யாக்.1:27) தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிப்பதும் நமமேல் விழுந்த கடமை. (மத்.11:5) ஆத்துமாவும, சரீரமும் இணைந்து செயல்படும் மனிதனை இரட்சிப்பது நம்மேல் விழுந்த பொறுப்பு.

எனவே இரண்டிற்கும் இணைந்த இடமுண்டு என்பதினை உணர்ந்து செயல்படும் சபையே பிரகாசிக்கும். அதுவே அநேகரை கவர்ந்திழுக்கும். இந்நிலைக்கு நம்மை ஆவியானவர் நடத்துவாராக.